**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

P.W.–1

O.S.No.30/2025

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. விஜய் செல்லன் | வயது:47 |
| த/பெ. : திரு. என். செல்லன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி வங்கியின் துணை மேலாளர் ஆஜர். பிரதிவாதி தோன்ற தரப்பினராக உள்ளார். வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் வாதி வங்கியின் துணை மேலாளர். முதல் விசாரணை வாக்குமூலம் தமிழில் தாயார் செய்யப்பட்ட பிறகு எனக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு சொன்னதன் அடிப்படையில் தெரிந்துகொண்டபிறகு கையொப்பம் செய்தேன். முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 26.2.2022 – வாதி வங்கி பிரதிவாதி கொடுத்த கடன் விண்ணப்பம் | அசல் | **வா.சா.ஆ 1** |
| 4.3.2022 – கடன் அனுமதி கடிதம் | அசல் | **வா.சா.ஆ 2** |
| 8.3.2022 – கடன் ஏற்பாட்டு கடிதம் | அசல் | **வா.சா.ஆ 3** |
| 8.3.2022 – கடன் ஒப்பந்துடன், கடன் உடன்படிக்கை ஆவணம் | அசல் | **வா.சா.ஆ 4** |
| 13.2.2024 – வாதி வங்கி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு | அலுவலக நகல் | **வா.சா.ஆ 5** |

| | | |
|---|---|---|
| 1.3.2024 – பிரதிவாதி சட்ட அறிவிப்பை மறுத்து திருப்பி அனுப்பிய அஞ்சல உரை | அசல் | **வா.சா.ஆ 6** |
| 8.3.2022 –1.1.2021 முதல் 13.1.2025 வரை உள்ள பிரதிவாதி வங்கி கணக்கின் பரிமாற்ற விவரங்கள் | கணினி நகல் | **வா.சா.ஆ 7** |
| 13.1.2025 – கடன் நிலுவை இருப்பு சான்று | அலுவலக நகல் | **வா.சா.ஆ 8** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

மேலே தட்டச்சு செய்யப்பட்ட விவரங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சரியாக உள்ளது என தெரிந்துகொண்டபிறகு கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.04.22 18:31:29 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.